**செய்தி வெளியீடு எண்: 535** **நாள்: 10.08.2018**

**<u>செய்தி வெளியீடு</u>**

**உற்பத்தி பொருட்களின் வடிவமைப்பு மற்றும் மதிப்பு மேம்படுத்துதல் பற்றிய கருத்தரங்கம்**

தமிழ்நாடு அரசின் தன்னாட்சி சேவை நிறுவனமான 'தமிழ்நாடு தொழில் முனைவோர் மேம்பாடு மற்றும் புத்தாக்க நிறுவனம்' (EDII-TN) 2001ம் ஆண்டில் தமிழக அரசால் துவங்கப்பட்டது. இச்சேவை நிறுவனம் மூலம் சிறு, குறு தொழில்முனைவோர் மற்றும் குழுமம் சார்ந்த அமைப்பினருக்கும் ஊக்கமளிக்கும் வகையில் கருத்தமர்வுகள் தொடர் பயிற்சிப் பட்டறைகள், அனுபவப்பகிர்வு மற்றும் விழிப்புணர்வுக்கல்வி ஆகியவற்றை மாநிலம் முழுவதும் நடத்தி வருகின்றது.

புதுமையான கண்டுபிடிப்பு மற்றும் வடிவமைப்பு என்பது, புதிய பொருள் அல்லது தொழில்நுட்பத்தோடு மட்டுமே தொடர்புடையது அல்ல. தினசரி பயன்பாட்டுக்கான பொருட்களை விரிவுபடுத்தவும், அபிவிருத்தி செய்யவும் அவை உதவுகின்றன. அதேபோன்று செலவுகளைக் குறைக்கவும் பயன்பாட்டை அதிகரிக்கவும் உதவுவதால், புதிய வர்த்தக வாய்ப்புகள் உருவாகின்றன. வடிவமைப்பு (Design) ஒரு புதிய துறையாக அங்கீகரிக்கப்பட்டு உள்ளது. போட்டி நிறைந்த சந்தையில் குறு, சிறு, நடுத்தரத் தொழில்கள் நிலைத்து நிற்கவும் வளரவும் வடிவமைப்பு உதவுகிறது.

வடிவமைப்பு என்பது தற்போது இருக்கின்ற நிகழ்முறையில் சாதகமான, தனித்தன்மையுடன், எதிர்காலத்துக்கேற்ற வகையில் சூழ்நிலைக்கேற்ப ஒரு நோக்கத்துடன் திட்டமிட்டு செய்யப்படுவது ஆகும். வடிவமைப்பு என்பது ஒரு அணுகுமுறை, செயல்முறை மற்றும் முறையியல் ஆகும். தொழில்துறை வடிவமைப்பு, அழகியியல் தயாரிப்பு வடிவமைப்பு போன்ற பயிற்சியின் மூலம் உற்பத்தி செய்யும் பொருட்களின் தரத்தை உயர்த்தி சந்தையில் முன்னிலையில் நின்று போட்டியிட முடியும்.

குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் வடிவமைப்பு பற்றிய நுணுக்கங்கள் அறிந்து கொள்ளும் வகையில் வரும் செப்டம்பர் மாதம் சென்னை, கோவை, மதுரை மாநகரில் ஒரு நாள் கருத்தரங்கம் நடத்த உள்ளது. இக்கருத்தரங்குகளில் வடிவமைப்பு துறை சார்ந்த வல்லுநர்கள் கலந்து கொண்டு பயிற்சி அளிக்க உள்ளனர். இக்கருத்தரங்கில் பல்வேறு தரப்பட்ட பொருட்கள் தயாரிக்கும் குறு சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்கள் கலந்து கொண்டு பயன் பெற இயலும். கல்லூரிகளில் பணியாற்றி வருகிற மற்றும் பயிலும் ஆசிரியர்கள், மாணவர்கள் இதில் கலந்து கொண்டு பயன் பெறலாம்.

மேலும் தகவல் அறிய மற்றும் இக்கருத்தரங்கில் தங்களின் பெயர்கள் பதிவு செய்து கொள்ள திரு.தாமஸ் ரெக்ஸ் வாஸ் கைபேசி எண்: **8668101652**, மின்னஞ்சல்:tc3@editn.in அவர்களை தொடர்பு கொள்ளவும். பதிவு செய்ய கடைசி நாள் : **31.08.2018.**

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**